**பதவி ஸ்ரீ புர பிரதேச சபை**

**திருகோணமலை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 17 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதவி ஸ்ரீ புர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபையினால் நடப்பாண்டில் ரூபா 7,397,636 பெறுமதியான கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போதிலும், அது ரூபா 6,976,315 ஆக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டமையால் சொத்துக்கள் ரூபா 421,321 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) நடப்பாண்டிற்காக ரூபா 125,850 தொகையான நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரச சார்பற்ற நிறுவனங்களால் 2015 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 4,385,000 பெறுமதியான பேருந்து மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான இரண்டு உழவு இயந்திரங்கள் மற்றும் மோட்டார் வண்டியொன்றின் பெறுமதியானது மதிப்பிடப்பட்டு மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|---|
| (அ) | 1989 ஏப்ரல் 17 ஆந் திகதிய 554/5 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நஜர்வாக) விதிக் கோவை | |
| | 141,143 மற்றும் 145 ஆகிய விதிகள் | வைப்புக்கள் பதிவேட்டினை பேணிச்செல்லல் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் ஒவ்வொரு வைப்பு வகைகளுக்காக தனித்தனியாக கணக்குகளை ஆரம்பித்தல் மற்றும் ஆண்டின் இறுதியில் வைப்புக்கள் தொடர்பில் விரிவான கூற்றொன்றினை தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 | சபைக்கு சொந்தமான 09 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 321,380 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,598,815 ஆக இருந்தது. அதற்கமைய நிதி விளைவுகளில் ரூபா 7,277,435 ஆன குறைவொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான மூலம் | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2016 மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 | ரூபா,000 |
| வீதவரியும் வரியும் | 50 | - | - | - | 50 | - | - | - |
| வாடகை | 1,100 | 1,083 | 1,110 | 96 | 1,062 | 1,109 | 1,088 | 123 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 478 | 457 | 472 | - | 349 | 289 | 324 | 15 |
| ஏனைய வருமானம் | 11,320 | 11,372 | 11,049 | 931 | 8,461 | 12,370 | 9,704 | 3,500 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்கள் முறைமைப்படுத்தல், மக்களின் சுகவாழ்வு, வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 28 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகளை விதிக்க வேண்டியிருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் 13 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன.

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

2017 ஆம் ஆண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (இ) சுற்றாடல் பிரச்சினைகள்

**சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களை வெளியிடுதல்**

1988 இன் 56 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க அதிகாரச்சட்டங்களால் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23 ‘‘அ’’ பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் அழிவு ஏற்படும் அரிசி ஆலைகள், தச்சு கைத்தொழில், கராஜ் மற்றும் சீமெந்துடன் தொடர்புடைய உற்பத்தி நிறுவனங்கள் போன்ற முயற்சிகள் நடைமுறைப்படுத்தும் போது சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்ள வேண்டிய போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் நடைமுறைப்படுத்தப்படும் அவ்வாறான 42 முயற்சிகள் அவ்வாறான அனுமதிப்பத்திரத்தினை பெற்றுக்கொள்ளாது தொழிற்சாலை நடாத்திச்

செல்லப்பட்டவாறு இருந்தது. இது தொடர்பில் ஏற்படக்கூடிய கூற்றாடல் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு சபையினால் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

சபையினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளாக சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன், உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு தேவையான வேலைத்திட்டம் மற்றும் அது தொடர்பான அளவீடுகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

### 3.2.1 ஊழியர் வெற்றிடங்கள்

2014 ஆம் ஆண்டு முதல் தொழில்துட்ப உத்தியோகத்தர், நூலகர், மின்சார தொழில்நுட்பவியலாளர் மற்றும் சாரதி ஆகிய பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு 2018 யூன் 13 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.3.1 சுவீகரிக்கப்படடாத சொத்துக்கள்

சபையினால் அரசிற்கு சொந்தமான காணிகளில் ரூபா 109,659,700 பெறுமதியான கட்டிடங்களில் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே உள்ளூராட்சி நிறுவனங்களின் போக்குவரத்து வசதிகளை ஒழுங்குபடுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளூராட்சி அமைச்சினால் சபைக்கு 03 வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அந்த காணிகளினதும் வாகனங்களினதும் உரித்தானது சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3.2 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

விபரங்கள் பின்வருமாறு ஆகும்.

(அ) பிரதேச சபையினால் 2015 சனவரி 27 ஆந் திகதி ரூபா 485,000 தொகையான பணம் செலவிடப்பட்டு நீர் மாதிரிப் பரிசோதனைத் தொகுதியொன்று மற்றும் நீர் வடிகட்டிகள் இரண்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த நீர் மாதிரிகளை பரிசோதனை செய்வதற்கு தொழில்நுட்ப அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் இல்லாதிருந்த காரணத்தால் அந்த உபகரணத் தொகுதி கொள்வனவு செய்யப்பட்ட நாள் முதல் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சினால் 2006 ஆம் ஆண்டின் போது சபைக்கு வழங்கப்பட்டிருந்த கெப் வண்டி 2015 ஆம் ஆண்டு முதல் செயலற்று வாகன நிறுத்துமிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன், அதன் பழுதுபார்த்து பயன்படுத்துவதற்கு அல்லது கைத்தவிர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் 2018 யூன் 13 ஆந் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.3.3 வருடாந்த பொருள் மெய்மையாய்வு

மீளாய்வாண்டிற்கான 2018 மே 29 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்விற்கமைய அழிக்கப்பட வேண்டிய மற்றும் பழுதுபார்க்கப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பில் மதிபாய்வு சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பரிந்துரைகள் 2018 யூன் 13 ஆந் திகதி வரையிலும் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.4 பெறுகைகள்

#### 3.4.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட தேசியப் பாதீட்டுச் சுற்றறிக்கையின் இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 ஒப்பந்த நிர்வாகம்

இது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் லச்சனகம குடிநீர் உத்தேச முறைமையின் கீழ் மேலதிக கிணறு ஒன்று நிர் பம்பியுடன் மீள் நிர்மாணத்திற்காக பெறுமதி ரூபா 1,287,804 தொகையான ஒப்பந்தமொன்று 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதி பொது அமைப்பொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன், பொது அமைப்பினால் ரூபா 287,822 பெறுமதியான 04 விடயங்கள் 2018 யூன் 12 ஆந் திகதி வரையிலும் நிறைவேற்றப்படாதிருந்ததுடன், சபையினால் அந்த பணிகள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டுள்ளதாக சான்றுபடுத்தி சிட்டைகள் உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபைகள் அமைசச்சின் பிரதேச சபைகளை வலுப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் யாய 11 குடிநீர் முன்மொழிவு முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 3,061,716 பெறுமதியான ஒப்பந்தமொன்று 2017 நவம்பர் 01 ஆந் திகதி கையளிக்கப்பட்டிருந்ததுடன், இதன் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.2.2 இன் பிரகாரம் விலைக்கேள்வியாளர்களுக்கு விலைக்கேள்விகளை முன்வைப்பதற்காக 21 நாட்கள் காலம் வழங்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் அதற்காக 14 நாட்கள் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.2.2 இன் பிரகாரம் பரந்த பிரச்சாரமொன்று வழங்கப்பட வேண்டிய போதிலும், சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மாத்திரம் அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக இரு ஒப்பந்ததாரர்கள் மாத்திரம் விலைக்கேள்வியினை சமர்ப்பித்திருந்ததுடன், அதன் போது ஆகக் குறைந்த விலைக்கேள்வியாளரின் மதிப்பீட்டு பெறுமதியை விட 15% அதிகமான விலைக்கேள்வி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக ஒப்பந்தத்தை கையளிக்கும் போது ரூபா 398,930 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் நோக்கமான 1.2.1 (அ) மற்றும் (இ) நிறைவேறியிருக்கவில்லை. மேலும், ஒப்பந்ததாரரால் ரூபா 237,000 பெறுமதியான அலுமினிய ஏணியொன்றினை பொருத்துதல், மூடியொன்றினை பொருத்துதல், குளோரின் கட்டமைப்பினை தயாரித்தல் மற்றும் பரிசோதிக்கும் பணிகளை நிறைவேற்றுவதற்காக 2018 யூன் 13 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே உடன்படிக்கைகளின் பிரகாரம் ஒப்பந்தத்தின் பணிகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் நிறைவு செய்யப்பட வேண்டிய போதிலும், ஒப்பந்தமானது 2018 யூன் 12 ஆந் திகதி வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. இதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டியதாக இருந்த தாமதக் கட்டணமான ரூபா 251,064 தொகையான பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் பிரதேச சபைகளை பலப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் - 2017 இன் கீழ் நிர்மாணங்களுக்காக ரூபா 1,805,858 பெறுமதியான 02 ஒப்பந்த உடன்படிக்கைகள் 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதி

கையொப்பமிடப்பட்டுள்ள போதிலும், உரிய பணிகள் 2018 யூன் 13 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 2 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் நிலவின. அதற்கமைய வருடாந்த பாதீடானது சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானத்தை அறவிடாமை |
| (இ) | ஒப்பந்த நிர்வாகம் | i. சுற்றறிக்கைகளுக்கமைய பணிகளை மேற்கொள்ளல் |
| | | ii. ஒப்பந்த குத்தகை தொகைகளை செலுத்துதல். |
| (ஈ) | மனிதவள முகாமைத்துவம் | ஊழியர் வெற்றிடங்களை நிரப்புதல். |